முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 22.10.2025
O.S. 28/2013
பி.வா..சா. 2 – முருகன்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை.

நான் வேலை பார்க்கும் மண்டலத்திற்குள் தெங்கம்புதூர் கிராமம் உட்படும். இந்த மண்டலத்தில் 18.08.2025 ல் இருந்து வேலை பார்க்கிறேன். ரிசர்வே முன்பாக சொத்துக்களின் பழைய புல எண் பதிவேடு என் வசம் இருந்தது என்றால் சரி. தெங்கம்புதுர் கிராமத்திற்கு எந்த ஆண்டு ரீசர்வே செய்யப்பபட்டது என்று எனக்கு தெரியாது.

ரீசர்வே எண்ணிற்காக பழைய புல எண் ஒப்புமை பதிவேடு அரசு அலுவலகத்தில் உள்ளது. வழக்கில் தாக்கல் செய்த இடை மனு எண் 10/2025 , 11/2025 மனுவில் சொத்திற்கான பழைய புல எண்ணிற்கான ஆவணங்கள் கிடைக்காததால் என்னால் சாட்சி அளிக்க இயலவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் சொத்திற்கான பழைய ரிசர்வே எண்ணிற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

இந்த வழக்கில் எதிர் வழக்குரையில் வாதிகளுக்கு எதிராகவும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆதராவாகவும் தாக்கல் செய்வேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக போய்விடும் என்பதற்காக பழைய புல எண் ஆவணத்தை தாக்கல் செய்வேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் நேரில் 04.10.2025.சென்று பார்த்தேன்.

நான் நேரில் சென்ற போது வாதிகளுக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்தின் பழைய எண்ணிலிருந்து புதிய சர்வே எண்ணிற்கு மாற்றும் போது அதன் விஸ்தீரணம் மாறாது ரிசர்வேயின் போது வழக்கு சொத்தை நேரில் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. பழைய சர்வே எண்ணிற்கு ஒன்றுக்குட்பட்ட ரீசர்வே எண்கள் இருக்கலாம் என்றால் சரிதான்.

நிலவரி ரசிதானது யார் பெயருக்கு பட்டா உள்ளதோ அவர் பெயருக்கு கொடுப்போம் என்றால் சரி. வா.சா.ஆவணம் நிலவரி ரசிதானது எங்கள்

அலுவலகத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலரின் முத்திரை இல்லாததால் உறுதிப்படுத்த முடியவில்லை. வா.சா.ஆ 3 ஆவணத்தில் பழைய முத்திரை உள்ளது என்றால் அதை கேரள அரசாங்த்துடையது. என்னால் உண்மைதன்மை சொல்லமுடியவில்லை. நிலவரி ரசிதுகளில் ரதிஸ் பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் 6 1/4 சென்ட் எழுதப்பட்டுள்ளது. என்றால் சரிதான். 2 ஆவணத்திலும் வேறுபாடு உள்ளது தெளிவில்லாமலும் உள்ளது.

பி.வா.சா. 3 பழைய சர்வே எண் 452A சொல்லபட்டது என்றால் சரிதான் ஆனால் பதிவு செய்யப்படாத ஆவணமாகும். பி.வா.சா.1 ஆவணத்தில் 6 ¼ சென்ட் குறிப்படப்பட்டது என்றால் சரி. வழக்கு பட்டியல் சொத்தின் பழைய சர்வே எண் 452/A என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் பழைய சர்வே எண் தெரிந்து கொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 703/11 ல் பட்டாதாரர் பெயர் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி.

பி.வா.சா. 17 ஆவணத்தில் பிரதிவாதிகள் பெயர் இல்லை என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயர் இல்லை. அதில் மணக்குடி ஆலயத்தின் பெயர் இல்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தின்படி ரிசர்வே எண் 703/11 ல் பிரதிவாதிகளுக்கோ மணக்குடி ஆலயத்திற்கோ உரிமை இல்லை என்றால் சரி. பி.வா.சா.14 எட்வின் கால்வின்ஸ் பெயரிலுள்ள பப்டடா நிலத்தை நான் நேரில் சென்று பார்க்கவில்லை. அந்த சொத்தானது வழக்கு சொத்தில் இருந்து 1 கி.மீ துரத்தில் உள்ளது என்றால் புது பாலத்தின் அருகே உள்ளது என்றாலும் எனக்கு தெரியாது.

பட்டா நிலத்தில் போக்ககுவரத்து செய்ய வாதிகள் கேட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் இடத்திற்கு நேரில் சென்று அளந்து பார்க்காமல் ஆவணத்தின் அடிப்படையில் அலுவலகத்தில் 3 1/2 சென்றுதான் வரும் என்று தவறாக ரிசர்வே செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே வாதிக்குரிய 61/2 சென்றிற்கு பட்டா வழங்க கடமை பட்டவர் என்றாலும்

சரியில்ல.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு சொத்திற்கு கிழக்குபக்கமும் தெற்குபக்கமும் கான்கிரிட் பாதை என்றால் கிழக்கு பக்கம் இல்லை தெற்கு பக்கம் உள்ளது. உண்மையில் கிழக்கு பக்கம் உள்ளது என்றாலும் வழக்கிற்காக மாற்றி சொல்றன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் வீடு எந்த திசை நோக்கி உள்ளது என்றால் வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கம் அவரது வீடு இல்லை. எனவே எனது முதல் விசாரணையில் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வீடு வழக்கு சொத்திற்கு தற்கு பக்கம் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரி. 1,2 பிரதிகளின் வீடு எனக்கு தெரியாது. சொத்து குறைவாக உள்ளதை சரி செய்ய வேண்டும் வாதிகள் வருவாய் துறையில் யாரிடமாவது மனு கொடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. கோப்பில் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரை முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.